வேலணை பிரதேசசபை

யாழ்ப்பாண மாவட்டம்

---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 22 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 11 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்ரெம்பர் 23 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

--------------------

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய வேலணை பிரதேசசபை 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி வேலணை பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், வருமானங்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | சொத்துக்கள் | | வருமானங்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| அதிகரித்துக் கூறல்கள் | | | 01 | 79,000 | | |
| குறைத்துக் கூறல்கள் | 01 | 1,000,000 | | | | |
| விடுபாடுகள் | | | | | 01 | 2,872,491 |

### 1.3.2 பெறுமதி மதிக்கப்படாத நன்கொடை வாகனங்கள்

அரசினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் நன்கொடையாக வழங்கப்பட்ட சபையின் பாவனையிலுள்ள 31 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

#### கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 32இ853இ075 பெறுமதியுடைய 06 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 11,763 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 142இ175 விளைந்திருந்தது.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 518,845 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 2இ038இ966 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.3 வருமான நிர்வாகம்

--------------------------------

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

--------------------------------------------------------------------------------------------------------------------

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 1,366 | 1,675 | - |
| குத்தகை வாடகைகள் | 1,223 | 1,316 | 19 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 114 | 337 | - |
| வேறு வருமானங்கள் | 26,928 | 25,784 | 9,124 |
| | 29,631 | 29,112 | 9,143 |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப்பணம்

-------------------------------

நீதவான் நீதிமன்றங்களிலிருந்து 2012 ம் ஆண்டிற்காக பெறவேண்டிய நீதிமன்றக் தண்டப் பணங்களும் ரூபா 2இ424இ100 சிட்டையிடப்பட்டு வருமானமாகவும் வருமதியாகவும் பதியப்பட்டதேயன்றி அறிக்கையிடும் திகதி வரையும் அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 முத்திரைத் தீர்வைக் கட்டணம்

-------------------------------------

2010 – 2012ம் ஆண்டுகளுக்கான காணிப் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்படவேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணம் ரூபா 5இ385இ278 பெறுவதற்கு ஆக்கபூர்வமான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப் பட்டிருக்கவில்லை.

2.4 சொத்து முகாமைத்துவம்

------------------------------------------

2.4.1 பயன்படுத்தப்படாத பௌதீகச் சொத்துக்கள்

------------------------------------------------------------------------

(i) மீளாய்வாண்டில் சுற்றலா பயணிகளுக்கு தங்குமிட வசதி ஏற்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,000,000 பெறுமதியான காணியானது அறிக்கையிடும் திகதி வரையும் பயன்பாடின்றி காணப்படுகின்றது.

(ii) சாட்டி கடற்கரைப் பிரதேசத்தில் 2010 ம் ஆண்டில் ரூபா 683இ400 செலவில் அமைக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை அறிக்கையிடும் திகதி வரையும் பயன்பாடின்றி காணப்படுகின்றது.

(iii) சபையின் களஞ்கியத்தில் கீழே குறிப்பிடப்படும் பொருட்கள் பயன்பாடின்றி காணப்படுகின்றது.

| பொருட்களின் விபரம் | எண்ணிக்கை | தற்போதையநிலை |
|---|---|---|
| டீயதயத ஆழவழ டிமைந (நன்கொடை) | 01 | பயன்படுத்தப்படுபதில்லை. |
| கணினி | 01 | பழுதடைந்துள்ளது. |
| 10 லீற்றர் தண்ணீர் கொள்கலன் | 13 | பயன்படுத்தப்படாதுள்ளது |
| புதிய உழவு இயந்திர ரயர் | 01 | பயன்படுத்தப்படாதுள்ளது |
| நிழற்படப் பிரதி இயந்திரம் | 01 | பழுதடைந்துள்ளது |
| தட்டச்சு | 03 | பழுதடைந்துள்ளது |
| மின்விசிறி | 08 | பழுதடைந்துள்ளது |
| றோனியோ இயந்திரம் | 01 | பழுதடைந்துள்ளது |
| சூரிய மின் கலமும் இணை பொருட்களும் | 01 | பழுதடைந்துள்ளது |

2.4.2 பெறப்பட வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------

2011-2012 காலப்பகுதியில் வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா 1,995,420 குறித்த காலப்பகுதியில் உரியவர்களிடமிருந்து மீளப் பெறப்படவில்லை அல்லது தீர்வு செய்யப்படவில்லை.

விபரம் வருமாறு:

| முற்பணம் வழங்கிய ஆண்டு | முற்பணம் வழங்கிய நோக்கம் | தொகை ரூபா |
|---|---|---|
| 2011 | குளம் ஆழமாக்கல் நிகழ்ச்சித் திட்டம் | 165,778 |
| 2012 | எரிபொருள் முற்பணம் | 4,042 |
| 2012 | வாகன திருத்தம் | 400,000 |
| 2012 | வீதி வேலை | 825,600 |
| 2012 | சூரிய மின் வீதி விளக்கு | 600,000 |
| | | 1,995,420 |

2.4.3 பதவியினர் கடன் நிலுவை

-------------------------------------------

இறந்த, பதவி வறிதாக்கப்பட்ட மூன்று அலுவலரிடம் அறவிடப்படாத பதவியினர் கடன் நிலுவை ரூபா 124,020 பிணைதாரரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவை 3-10 வருட கால நிலுவைகளாகும்.

2.4.4 களஞ்சிய இருப்பும் பௌதீக செவ்வை பார்த்தலும்

---------------------------------------------------------------------------------

i சபையின் களஞ்சிய பொருள் பதிவேட்டில் பதிவு செய்யப்படாது ேர்ே 8451 இலக்க ர்நசழ ர்ழனெய மோட்டார் சைக்கிள் காணப்படுகின்றது.

ii தார் இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் நிதியாண்டு இறுதியில் 1047 லீற்றர் அளவுடைய தார் இருப்பாக காணப்பட்ட போதும் பௌதீக செவ்வை பார்த்தலின்போது 2790 லீற்றர் அளவுடைய தார் இருப்புகள் காணப்பட்டன.

2.4.5 வருடாந்த இருப்பு கணிப்புச்சபை அறிக்கை

---

2012ம் ஆண்டுக்கான இருப்புக் கணிப்பீட்டுச்சபை அறிக்கையின் பிரகாரம் சபையில் இருப்பு பேரேட்டுடன் ஒப்பிடும்போது 17 எண்ணிக்கையான பொருட்கள் பற்றாக்குறைநயாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

| பொருள் வகை | புத்தக மீதி | உள்ளவாறான மீதி | பற்றாக்குறை |
|---|---|---|---|
| கதிரை | 54 | 49 | 05 |
| கதிரை (பிளாஸ்ரிக்) | 15 | 09 | 06 |
| அலுவலகப் பை (ழுககைை௨நச டியப) | 07 | 01 | 06 |
| | 76 | 59 | 17 |

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | விபரம் |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக ஒழுங்கு விதி | |
| (i) அத்தியாயம் ஏ பிரிவு 140 | உரிய திகதியில் ரூபா 1இ995இ420 முற்பணம் செலுத்தத் தவறும் போது செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் ஏஜஜஜ பிரிவு 03 | வழங்குனரை பதிவு செய்யும் நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் ஓஜ பிரிவு 206 | கணிப்பிட்டுச்சபை அங்கத்தவர் நியமனத் திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள் பொருட் பதிவேட்டு அடிப்படையில் மெய்மையாய்வு செய்யவேண்டும் என்பதற்கு மாறாக 2 மாதம் முடிவடைந்தும் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) <u>இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள்.</u>

| | |
|---|---|
| (i) நிதி ஒழுங்கு விதி – 396 | ரூபா 15இ076 பெறுமதியான காசோலைகள் 2 வருடங்களாக நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதி ஒழுங்கு விதி – 571 | காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 1,119,100 தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) 1983ம் ஆண்டின் விதவை அனாதை ஓய்வூதிய திட்ட இல. 24 பிரிவு 4 | அலுவலர்களிடம் அறவீடு செய்த விதவை அனாதை ஓய்வூதியப் பங்களிப்பு ரூபா 16,315 விதவை அனாதை ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

2.6 அங்கீகாரமற்ற காணி கொள்வனவு

---------------------------------------------------------

சபையின் நிலையான வைப்பினை முடிவுறுத்தி ரூபா 1,000,000 இற்கு மீளாய்வாண்டில் காணி கொள்வனவு செய்யப்பட்டது. ஆயினும் காணி கொள்வனவிற்காக நிதியாண்டு வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை. அத்துடன் காணி கொள்வனவிற்கு அமைச்சரின் முன் அனுமதி பெறப்படாது காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது

2.7 சூரிய மின்கல வீதி விளக்குகள் கொள்வனவில் மேலதிக கொடுப்பனவு

---------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒவ்வொன்றும் ரூபா 9,400 பெறுமதியான 10 எண்ணிக்கையான சூரிய மின்கல வீதி விளக்குகள் ரூபா 940,000 இற்கு தனியார் கம்பனியொன்றில் வவுனியாவில் கொள்வனவு செய்யப்பட்டது. ஆயினும் அதே தரமும் வகையுமுடைய ஒவ்வொன்றும் ரூபா 125,000 பெறுமதியான 08 சூரிய மின்கல வீதி விளக்குகள் தனியார் கம்பனியொன்றில் ரூபா 1,000,000 இற்கு கேள்விச்சபை தீர்மானம் நிறைவேற்றப்படாது கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த நிறுவனம் நல்லூர் பிரதேச சபையில் மின்சார பொருட்கள் விற்பனைக்கு உரிமம் பெறப்பட்டிருக்கவில்லை. ஓரே தரமும் வகையுமான பொருட்கள்

ஒவ்வொன்றும் ரூபா 31,000 விலை வேறுபாட்டில் கொள்வனவு செய்யப்பட்டிருப்பது சபைக்கு ரூபா 248,000 மேலதிக கொடுப்பனவு ஏற்பட்டுள்ளது.

## 2.8 செயற்திட்டங்கள் செயற்படுத்துவதில் காலதாமதம்

சபையினால் நடைமுறையாண்டில் செயற்படுத்தவென பாதீடு செய்யப்பட்ட 02 செயற்திட்டங்கள் செயற்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டதினால் அவ்வேலை திட்டங்களை எதிர்வரும் காலங்களில் செய்வதற்கென சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ரூபா 3,852,886 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| செயற்திட்ட விபரம் | தொகை ரூபா |
|---|---|
| கேணி வீதி திருத்தம் | 2,278,822 |
| இராசையா வீதி | 1,574,064 |
| | 3,852,886 |

### 2.8.1 முற்றாக கைவிடப்பட்ட செயற்திட்டம்

மீளாய்வாண்டில் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1இ000இ000 பெறுமதியான இரண்டு செயற்திட்டங்கள் முற்றாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்ட விபரம் | தொகை ரூபா |
|---|---|
| புங்குடுதீவு நாமுன்டாமுனை | 500,000 |
| ஆல்லப்பிட்டி தாளையடி இந்து மயானம் | 500,000 |
| | 1,000,000 |

2.9 செயற்பாடுகளில் செயற்திறமையின்மை

---

1 சபைக்கு 2009-2012ம் ஆண்டு காலப்பகுதியில் கிடைத்த சிசு பரிபாலன மற்றும் சனசமூக நன்கொடைகள் ரூபா 879,758 குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது நானாவித வைப்பு கணக்கில் காணப்படுவது சபை பரப்பிலுள்ள மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்க முடியாது போனமையினை காட்டுகின்றது

2 சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ரூபா 8இ085இ660 பெறுமதியானவை செலுத்தப்பட வேண்டுமென கணக்கிடப்பட்டிருந்தும் அறிக்கையிடும் திகதி வரையும் செலுத்தப்பட்டிருக்வில்லை.

3 இறந்த, இடமாற்றத்தில் சென்ற பதவி வறிதாக்கப்பட்ட அலுவலர்களுக்காக வைப்பிலிடப்பட்டுள்ள சம்பளங்கள் ரூபா 211,021 உரிய நபர்களுக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

2.10 திண்மக் கழிவு முகாமைத்துவம்

---

சபையினால் திண்மக் கழிவுகளை கொட்டுவதற்கான எல்லை சுவர் அமைப்பதற்காக முதற்கட்டமாக ரூபா 559,226 செலுத்தப்பட்டுள்ளது. அண்ணளவாக 40% வேலைகள் முடிவடைந்த நிலையிலுள்ளது. ஆயினும் 17.12.2012ம் திகதிய கணியச் சிட்டைப் பிரகாரம் வேலை முற்றாக நிறைவேற்றியமைக்காக தொழிநுட்பவியலாளரினால் வேலை நிறைவேற்று அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபை அதிகாரச் சட்டத்தின் 3ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அப்பிரதேச மக்களின் வசதிகளை பாதுகாப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்கத் தவறியமை சுட்டிக்காட்டுகின்றது.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i வருமானசேகரிப்பு

ii நிலையான சொத்துக்கள்

iii கணக்கீடு

iv மனிதவள முகாமைத்துவம்

v நன்கொடை

vi நானாவித வைப்புக்கள்

vii வரவு செலவுத்திட்டம்